# இனிமையான குழந்தைகளே! கர்மம், அகர்மம் விகர்மத்தின் கதியை கவனத்தில் வைத்து இந்த கர்மேந்திரியங்கள் மூலம் எந்த பாவ கர்மமும் செய்யக் கூடாது. தானம் கொடுத்துவிட்டால் கிரகணம் நீங்கிவிடும்.

கேள்வி: எந்த விஷயத்தில் பிரம்மா பாபாவைப் பின்பற்றக் கூடிய குழந்தைகள் எதிர்காலத்தில் சிம்மாசனத்திற்கு உரியவர்களாக ஆகிறார்கள்?

பதில்: . பிரம்மா பாபா, தேகத்தின் கூடவே முழுமையாக பலியானார், தன்னுடைய அனைத்தை யும் ஈஸ்வரன் பெயரில் குழந்தைகளின் சேவையில் ஈடுபடுத்தினார், நேரடியாக காப்பீடு (இன்சூரன்ஸ்) செய்தார். ஆகையால் உலக இராஜ்யம் அவருக்கு கிடைத்தது. அதைப்போலவே தந்தையைப் பின்பற்றுங்கள். நல்ல குழந்தை என்ற சான்றிதழ் பெற வேண்டும். நேரடிக் குழந்தையாகி தன்னுடைய உடல், மனம், பொருளால் சேவை செய்ய வேண்டும். தந்தையின் முழுமையான உதவியாளர் ஆக வேண்டும். அனைத்தையும் காப்பீடு செய்து 21 பிறவிகளின் இராஜ்யத்திற்கு உரிமையாளர் ஆக முடியும்.

பாடல்: குழந்தைப் பருவத்தை மறந்துவிடாதீர்கள்....

ஓம் சாந்தி! இனிமையிலும் இனிமையான குழந்தைகள் பாட்டைக் கேட்டீர்கள். இப்போது குழந்தைகள் வாழ்ந்து கொண்டே இந்த உலகத்திலிருந்து இறந்து, அந்த உலகத்திற்குச் செல்வதற்காக தந்தையின் மடியில் வந்துள்ளீர்கள். எந்த தந்தை? பரம்பிதா பரம் ஆத்மா அதாவது பரமாத்மா. எப்போதும் புரிய வைக்கும்போது பாபா ஜோதிர்லிங்கம் அதாவது ஜோதி சொரூபம், 1000 சூரியனைப் போல ஒளிமயமானவர் என்று சொல்லாதீர்கள். இப்படி சொல்வது உண்மையில் தவறாகும். என்ன சொல்ல வேண்டும்? பரம்பிதா பரமாத்மா அதாவது பரம் ஆத்மா, அவர் எப்போதும் பரந்தாமத்தில் இருக்கின்றார். பரம் என்றால் உயர்ந்ததிலும் உயர்ந்த நிராகார தந்தை, அவர் அனைத்து ஆத்மாக்களின் தந்தை. ஆகையால் அவரை சுப்ரீம் என்று சொல்லப்படுகிறது. அவர் பிறப்பு இறப்பு சக்கரத்தில் வருவதில்லை. பாபா புரியவைக்கிறார் - குழந்தைகளே!, நானும் பிறப்பு இறப்பு சக்கரத்தில் வந்தால், பிறகு அனைவரையும் கடைசியில் யார் முன்னேற்றுவார்கள்? நான்தான் வந்து அனைவரையும் துக்கத்திலிருந்து நீக்கி அழைத்துச் செல்கிறேன். நான்தான் துக்கத்தை நீக்கி சுகத்தை கொடுக்கக்கூடியவர். ஆனால் மனிதர் களுக்குத் தெரிவதில்லை. ஓ! பரம்பிதா பரமாத்மா என்று பக்திமார்க்கத்தில் பாடிக்கொண்டே இருக்கிறார்கள். கண்டிப்பாக அவர் தந்தை என்று புரிந்து கொள்கிறார்கள். ஆனால், அவர் நமக்கு எப்படி தந்தையாக இருக்கிறார்? அவர் யார்? இதைத் தெரிந்து கொள்ளவில்லை. மனிதர்கள் போன்ற உருவம் கிடையாது. பிரம்மா, விஷ்ணு, சங்கரரை நினைவு செய்கிறார்கள். அவர் களையோ இந்தக் கண்களால் பார்க்க முடிகிறது. மற்றபடி இவர்(சிவன்) யார்?, சிவனுடைய கோவிலுக்குச் செல்கிறார்கள். ஆனால் அவரை ஏன் நினைவு செய்கிறோம் என்பது தெரிவதில்லை.

தந்தை அமர்ந்து புரிய வைக்கிறார் - தேவி தேவதைகள் எப்போது வாம (பக்தி) மார்க்கத்தில் வருகிறார்களோ, அப்போது சோமநாத் கோவிலைக் கட்டுகிறார்கள். அவர் சிவதந்தை என்பதை மட்டும் புரிந்திருக்கிறார்கள். ஆனால்

அவர் சொர்க்கத்தை படைக்கக் கூடியவர் என்பது தெரிவ தில்லை. நம்மை சொர்க்கத்தின் எஜமானன் ஆக்கக் கூடியவர். இது தெரிந்திருந்தால் மற்றவர்களுக்கு சிவபாபாவின் வரலாற்றைச் சொல்ல முடியும். இதை பக்தர்கள் தெரிந்திருக்கும்படி நாடகத்தில் பதிவாகவில்லை. தெரிந்து கொள்வது என்றால் ஆஸ்தியை அடைவதாகும். தெரிந்து கொள்ளவில்லை என்றால் ஆஸ்தியை இழப்பதாகும். பாபா சொல்கிறார் - நான் சொர்க்கத்தைப் படைக்கக் கூடியவன், உங்களுக்கு சுகம் கொடுக்கின்றேன், தூய்மையாக்குகின்றேன். பிறகு, 5 விகாரங்கள் உங்களைத் தூய்மை யற்றவர்களாக ஆக்குகிறது. கலைகள் குறைந்து கொண்டே போகிறது. நீங்கள் கறுப்பாகி விடுகிறீர்கள். முதலில் நீங்கள் 16 கலைகள் சம்பூர்ணமான நிலவாக இருந்தீர்கள், தூய்மையாக இருந்தீர்கள். இப்போது உங்களுக்கு கிரகணம் பிடித்துள்ளது. தானம் கொடுத்து விட்டால் கிரகணம் நீங்கிவிடும் என்று பாபா சொல்கிறார். 5 விகாரங்களைத் தான் கிரகணம் என்று சொல்கிறோம். அதன் மூலம் ஆத்மாக்களாகிய நீங்கள் துக்கமானவர்களாக கறுப்பாக ஆகிவிட்டீர்கள். பாபா சொல்கிறார் - நான் பிரமாணர்களாகிய உங்கள் தந்தை. ஏ! பிராமணர் களே உங்களிடம் இருக்கும் 5 விகாரங் களை எனக்கு தானம் கொடுத்துவிட்டால் கிரகணம் நீங்கிவிடும். தானம் கொடுத்துவிட்டு பிறகு இன்றிலிருந்து ஒருபோதும் தவறு எதுவும் செய்யக்கூடாது. மாயையின் புயல் நிறைய வரும். ஆனால் கர்மேந்திரியங்களால் கோபம் போன்ற விகாரங்களைச் செய்வதன் மூலம் பாவம் ஆகிவிடும். கர்மம், அகர்மம், விகர்மத்தின் நிலையைக் கூட உங்களுக்குப் புரிய வைக்கிறேன். உங்களுடைய கர்மம் விகர்மமாக (பாவ கர்மமாக) ஆகக் கூடாது. நான் குழந்தைகளாகிய உங்களை விகர்மாஜீத் (பாவ கர்மங்களை வென்றவர்) ஆக்குகிறேன். இதுவே இராகுவின் கிரகணம் ஆகும். தானம் கொடுத்துவிட்டால் கிரகணம் நீங்கிவிடும். பாபா சொல்கிறார் - என்னுடைய இனிமையான குழந்தைகளே! இந்த 5 பூதங்களை தானம் கொடுங்கள். இதில் பைசா போன்றவைக்கான எந்த விஷயமும் இல்லை. இவரோ தந்தை ஆவார், நீங்கள் நேரடிக் குழந்தைகள். நேரடிக் குழந்தைகள் தான் தந்தைக்கு உதவி செய்ய வேண்டும். நீங்கள் உடல், மனம், பொருளால் சேவை செய்கின்றீர்கள். பாபாவுடைய கடமையும் உங்களுக்கு சேவை செய்வதாகும். பாபா சொல்கிறார் - இவை அனைத்தும் குழந்தைகளாகிய உங்களுடையதாகும். பக்தி மார்க்கத்தில் நீங்கள் பகவானுக்கு கொடுத்துக் கொண்டே வந்தீர்கள். ஆனால் ஈஸ்வரன் ஒன்றும் கேட்கவில்லை. நீங்கள் இதை காப்பீடு செய்கிறீர்கள். ஈஸ்வரனுக்குக் கொடுப்ப தால், ஈஸ்வரன் அடுத்த பிறவியில் உங்களுக்குக் கொடுப்பார். ஆக, இது காப்பீடு ஆகி விட்டதல்லவா! அடுத்த பிறவியில் இதன் பலன் கிடைக்கிறது. ஈஸ்வரன் வள்ளல் ஆவார். இப்போது நீங்கள் 21 பிறவிகளுக்காக காப்பீடு செய்கிறீர்கள். அவர்கள் ஒரு பிறவிக்காக காப்பீடு செய்கிறார்கள். இங்கேயோ அனைத்தும் 21 பிறவிகளுக்காக காப்பீடு செய்யப் படுகிறது. மகன் தந்தையை காட்டுவார் என்று சொல்லப்படுகிறது! பாருங்கள் பிரம்மா தந்தையிடம் என்னவெல்லாம் இருந்ததோ அனைத்தையும் ஈஸ்வரன் பெயரில் குழந்தை களின் சேவையில் ஈடுபடுத்தி விட்டார். சிவபாபாவை வாரிசாக ஆக்கிவிட்டார். உடல், மனம், பொருள் அனைத்தையும் கொடுத்து விட்டார். ஆக, அதன் பலனாக தன்னுடைய முயற்சியின் மூலம் அவருக்கு உலக இராஜ்யம் கிடைக்கிறது. ஏனெனில் அவர் நேரடிக் குழந்தையாக இருக்கிறார். நீங்கள் என்னுடையவராக ஆவதன் மூலம் 21 பிறவிகளுக்கு சொர்க்கத்தின் எஜமானன் ஆகின்றீர்கள். ஆனால், எந்தளவுக்கு

பலியாகின்றீர் களோ அந்தளவுக்கு ஆஸ்தி கிடைக்கும். தேகத்தின் கூடவே அனைத்தையும் பலியாக்க வேண்டும். யார் தாய், தந்தையைப் பின்பற்றுவார்களோ அவர்களே சிம்மாசனத்திலும் அமர்வார்கள். ஆக பாபா சொல்கிறார் - தானம் கொடுத்துவிட்டால் கிரகணம் நீங்கிவிடும். தானம் கொடுத்துவிட்டு பிறகு திரும்ப பெற்றுக் கொண்டால், துர்கதியைத் தான் அடைவீர்கள். முழுமையான முயற்சி செய்ய வேண்டும். முயற்சி செய்யும் மாணவர்கள் நன்றாகப் படிக்கும் போது (தரவரிசையில்) உயர்ந்த நம்பர் அடைகிறார்கள். நீங்களும் முயற்சி செய்து உயர்ந்த நம்பர் பெறுங்கள். இதில் எந்த கஷ்டமும் கிடையாது, தூய்மையாக மட்டுமே இருக்க வேண்டும் அவ்வளவே. இதற்காக பாபாவிடமிருந்து பலமும் கிடைக்கிறது. மகிழ்ச்சியின் அளவும் அதிகரிக்கிறது.

நாம் தேவதை ஆக வேண்டுமென்றால், எந்த அவகுணமும் இருக்கக் கூடாது. 16 கலைகள் நிறைந்தவர்களாக சம்பூர்ண நிர்விகாரியாக இங்கே தான் ஆக வேண்டும். ஆக, எந்த அவ குணமும் இருக்கக் கூடாது. அரை கல்பமாக விகாரி ஆகின்றீர்கள் எனவே மாயை கூட சொல்கிறது - இப்போது இவர்கள் நிர்விகாரி (விகாரமற்றவர்) ஆகிறார்கள். நான் மீண்டும் விகாரியாக ஆக்குகிறேன். இந்த மாயையின் யுத்தம் நடக்கிறது. இது தான் பிரச்சனையாக உள்ளது. மாயையின் மீது வெற்றி அடைய வேண்டும். அவர்கள் இம்சையான சண்டையைக் காட்டி தவறாக்கிவிட்டார்கள். நீங்கள் மாயை மீது வெற்றி அடைவதன் மூலம் உலகத்தின் எஜமானன் ஆகின்றீர்கள். தந்தைக்கு 5 விகாரங்களை தானம் கொடுக்கா விட்டால், ஸ்ரீ நாராயணரை அல்லது ஸ்ரீ இலட்சுமியை மணமுடிக்க முடியாது. ஆக குழந்தை களாகிய நீங்கள் மனம் என்ற கண்ணாடியில் பார்க்க வேண்டும் - நான் கர்மேந்திரியங்கள் மூலம் எந்தத் தவறும் செய்யவில்லை தானே? மாயையின் புயல் கூட முன்பை விட பலமாக வரும். வைத்தியர்கள் மருந்து கொடுக்கும் போது சொல்கிறார்கள் - உங்கள் முந்தைய பழைய நோய் வெளியேறும். இதில் பயப்படக் கூடாது. இது போன்று வரத்தான் செய்யும். இவர் (சிவபாபா) கூட மருத்துவராவார். பாபா சொல்கிறார் - நீங்கள் என்னுடைய குழந்தைகளாக ஆகின்றீர்கள் என்றால் பிறகு உங்களோடு இராவணனுடைய யுத்தம் நன்றாகவே நடக்கும். மாயை நன்றாக சண்டை போடும். ஆகையால் புயலைப் பார்த்து பயப்படக்கூடாது. தந்தையுடையவர்களாக ஆகி யுள்ளீர்கள் என்றால், இந்த குழந்தைப் பருவத்தை மறக்கக் கூடாது. இது ஈஸ்வரிய குழந்தைப் பருவம். ஈஸ்வரனின் மடியில் ஒரு தடவை வந்தால், பிறகு தேவதைகளின் மடியில் 21 தடவை செல்வீர்கள். ஈஸ்வரிய பிறவிக்குப் பிறகு, நீங்கள் சொர்க்கத்திற்குச் செல்கிறீர்கள். சான்றிதழ் பெற வேண்டும். பாபா நாங்கள் உங்களுடைய நல்ல குழந்தையா? அல்லது கெட்ட குழந்தையா? பாபாவால் பதில் சொல்ல முடியும். நல்ல குழந்தையிலும் கூட எந்த நம்பரில் வருவேன்? என்ன பலவீனம் இருக்கிறது? பாபாவால் பதில் சொல்ல முடியும். நமக்கு நாமே புரிந்து கொள்ள முடியும். நாம் சேவையே செய்யவில்லை என்றால், இவ்வளவு உயர்ந்த பதவியை எப்படி அடைவோம்? நல்லது. பாபா சொல்கிறார் - நீங்கள் என்ன செய்யவேண்டும் என்றால், ஒரு மருத்துவமனை அல்லது கல்லூரியை திறவுங்கள். நீங்கள் போகாவிட்டாலும், மற்றவர்கள் நிறைய பேர் பலனடைவார்கள். ஆக, உங்களுக்குப் பரிசு கிடைக்கும். மனிதர்கள் தர்மசாலை உருவாக்குகிறார்கள். அதனால், நிறைய பேர் வந்து அதில் ஓய்வு எடுப்பார்கள். ஆக, அடுத்த பிறவியில் அவருக்கு நல்ல மாளிகை கிடைக்கும்.

பாபாவிடம் நிறைய பேர் வருகிறார்கள். அவர்கள் சொல்கிறார்கள் - இந்த (ஆன்மீக ) மருத்துவமனையை திறவுங்கள், நாங்கள் உதவி செய்கிறோம். பெரிய மருத்துவமனையாக திறவுங்கள். ஞானத்தைக் கேட்க தனக்கே நேரம் இல்லை என்றாலும் மூன்றடி நிலத்தில் இந்த மருத்துவமனை மற்றும் கல்லூரியைத் திறந்து விடுங்கள். மருத்துவமனை மூலம் சதா நோயற்றவர்களாக ஆகிவிடு வார்கள். கல்லூரியின் மூலம் சதா செல்வந்தர்களாக ஆகிறார்கள். நிறைய பேர் வந்து பலனடையும் போது உங்களுக்கு புண்ணியம் ஏற்படும். அதிக செலவும் கிடையாது. இன்றைய காலத்தில் எவ்வளவு பைசா சம்பாதிக்கிறார்கள். கோடீஸ்வரர்களாக இருக்கிறார் கள். அவர்களுடைய மகன்கள், பேரன்கள் அதை சாப்பிடுவார்களா என்ன? துண்டு கூட கிடைக்காது, அனைத்தும் அழிந்து போய் விடும். ஏழைகளுக்கு இராஜ்யம் கிடைக்கிறது. பாபா ஏழைப்பங்காளன் அல்லவா! இந்த பாபா மிகச் சாதாரணமானவராக இருந்தார். ஆயிரம் ரூபாய் தான் இருக்கிறது என்றால், அவரை ஏழை என்று சொல்லலாம். இங்கே ஏழை கூட நல்ல பதவி அடைய முடியும். மற்றவர்களுடைய இலட்சத்தையும் கோடியையும் வாங்கி என்ன செய்வது? ஏழைகளின் சில்லரை பைசா மூலம் தான் ஸ்தாபனை செய்கின்றார். காந்திக்கு எவ்வளவு பேர் தானம் கொடுத்தார்கள். அதில் எவ்வளவு பேர் இறந்தார்கள். எவ்வளவு கஷ்டத்தைப் பொறுத்துக் கொண்டார்கள். உங்களுக்கு எந்தக் கஷ்டமும் கிடையாது. பாபா சொல்கிறார் - நீங்கள் முதலில் இராஜயோகத்தைக் கற்றுக் கொள்ளுங்கள். அப்போது உங்களுக்கு இராஜ்யம் கொடுப்பேன். இந்த கலியுக இராஜ்யமோ கானல் நீரைப்போன்றது. ஒரு கதை இருக்கிறது - திரௌபதி துரியோதனருக்கு அழைப்பு விடுத்தார். அவர் வரும்போது பளிங்குத் தரையை நீர் நிறைந்த குளம் என்று நினைத்து ஆடையை ஒதுக்கினார் (பளிங்குத் தரை துரியோதனனின் கண்ணுக்கு குளம் போன்ற காட்சி அளித்தது). அப்போது திரௌபதி சொன்னார் - குருடனின் மகன் குருடன் (குருடன் திருதராஷ்டிரனின் மகன் துரியோதனனும் குருடன்) இதுவோ கானல் நீராகும். நாங்கள் சுயராஜ்யத்தை (இந்தியாவின் சுதந்திரம்) அடைந்து விட்டோம் என்று அனைவரும் நினைக் கிறார்கள். ஆனால், எவ்வளவு துக்கம் இருக்கிறது. பிரஜைகளும் எவ்வளவு துக்கம் அடைகிறார் கள். மரணம் கண்முன்னால் இருக்கிறது. பாபா சொல்கிறார் - இவர்கள் அனைவரும் இறந்து விட்டனர். இது சுடுகாடாகும். நீங்கள் இதை பரிஸ்தானாக (தேவதை களின் பூமியாக) மாற்ற வேண்டும். வைரம் முத்துக்களால் மாளிகைகளை உருவாக்குவோம். இங்கேயோ கல்புரியாகும். அங்கே தங்கபுரியாக இருக்கும். ஆகையால், பாபா புரிய வைக்கிறார் - தானம் கொடுத்து விட்டால் கிரகணம் நீங்கிவிடும். பிறகு 16 கலைகள் நிறைந்தவர்களாக ஆகிவிடுவீர்கள். இப்போது நீங்கள் தூய்மையற்றவர்களாக இருக்கிறீர்கள். மனிதர்கள் எவ்வளவு குப்தமாக இருக்கிறார்கள். சண்டை ஏற்படும் போது தூக்கம் போய் விடுகிறது. தூக்கமே வருவதில்லை. தூக்கமாத்திரை போட்டு தூங்குகிறார்கள். இதுவோ இராவண இராஜ்யம். இப்போது தசரா தினத்தன்று இராவணனை எரிப்பார்கள். எதுவரை வினாசம் ஏற்படவில்லையோ அதுவரை எரித்துக் கொண்டே இருப்பார்கள். வினாசத்திற்கு பிறகு இராவணனை எரிக்க மாட்டார்கள். துவாபரயுகத்திற்குப் பிறகு எரிப்பதற்காக இராவணனை வெளியே கொண்டுவருகிறார்கள். வருடாவருடம் இராவணனை எரிக்கிறார்கள். ஆனால் அவன் இறப்பதே இல்லை. வருடா வருடம் நீங்கள் இரக்ஷ்ôபந்தன் கொண்டாடு கிறீர்கள், இராக்கி

கட்டுகிறீர்கள். பிறகு தூய்மை யற்றவர்களாக ஆகிவிடுகிறார்கள்.

இலட்சுமி நாராயணனிடம் எவ்வளவு அளவற்ற செல்வம் இருந்தது. அவர்களுக்கு எவ்வளவு பூஜை நடக்கிறது. இலட்சுமிக்கு மட்டும் பூஜை செய்வதில்லை. நான்கு கரங்களுடைய விஷ்ணுவிற்கும் பூஜை செய்கிறார்கள். அதில் இரண்டு பேரும் வந்துவிடு கிறார்கள். இலட்சுமியோடு நாராயணரும் கண்டிப்பாக வேண்டும். ஆகையால், இரண்டு பேருக்கும் பூஜை செய்கிறார்கள். ஜோடியாக இல்லாமல் வேலை எப்படி நடக்கும்? இல்லற மார்க்கம் அல்லவா! நீங்கள் உலகத்தின் எஜமானர் ஆகின்றீர்கள். குழந்தைகள் கேட்கிறார்கள் - தீபாவளி அன்று இலட்சுமிக்கு பூஜை செய்யவில்லை என்றால் உங்களிடம் பணம் வராது என்று அனைவரும் சொல்கிறார்கள். ஆகையால் பாபா வழி சொல்கிறார் - குழந்தைகளே! இதில் கூட சாட்சியாக இருந்து நடிப்பை நடியுங்கள். இல்லையானால் சண்டை சச்சரவு ஏற்படும். அதுபோல பாபா சொல்கிறார் - மகளின் திருமணம் செய்ய வேண்டும் என்றால் சாட்சியாக இருந்து பாகத்தை நடியுங்கள். இல்லையானால் சச்சரவு ஏற்படும். பெண் குழந்தைகள் விகாரமற்றவர்களாக வாழ விரும்பவில்லை என்றால், அப்படிப் பட்ட இக்கட்டான சூழ்நிலையில் அவளுக்கு திருமணம் செய்து வையுங்கள். தூய்மையாக வாழ விரும்பவில்லை என்றால் விட்டுவிடுங்கள். அவர்களை தொந்தரவு செய்யக் கூடாது. குமாரி 21 குலத்திற்கு நன்மை செய்ய முடியும். நீங்கள் அனைவரும் பிரம்மா குமார், குமாரிகள். உங்களுடைய தொழிலே அனைவரையும் சொர்க்கத் தின் எஜமானன் ஆக்குவதாகும். நாம் எவ்வளவு பேரை தனக்கு சமமாக ஆக்கியுள்ளோம் என்று மனதிடம் கேளுங்கள். இது மிஷன் இயக்கம் அல்லவா! இங்கே நீங்கள் மனிதர்களை தேவதை களாக ஆக்குகின்றீர்கள். ஆக நிறைய உழைக்க வேண்டும். நீங்கள் இறைவனின் உதவி யாளர்கள். நான் உங்களை துக்கத்திலிருந்து நீக்கி சொர்க்கத்தின் எஜமானர் ஆக்குகின்றேன். நான் தன்னலமற்ற சேவாதாரி. உங்களுக்கு இராஜ்யத்தைக் கொடுத்துவிட்டு நான் வானபிரஸ்தத்தில் சென்று விடுகிறேன். எனக்கு இராஜ்யம் செய்ய வேண்டும் என்ற ஆசை கிடையாது. உங்களுக்கு இராஜ்யத்தை கொடுக்கின்றேன். நீங்கள் உங்களுடைய இராஜ்ய பாக்கியத்தை மீண்டும் பெற்றுக் கொள்ளுங்கள். நாம் தான் தேவி தேவதைகளாக இருந்தோம். 84 பிறவிகளுக்கு இப்போது இராவண சம்பிரதாயத்தினராக ஆகியுள்ளோம் என்று நீங்கள் தெரிந்துள்ளீர்கள். இராவணனைத்தான் எப்போதும் எரிக்கிறார்கள். இராவணனுக்கு ஒருபோதும் பூஜை செய்வதில்லை. யார் சுகம் கொடுக்கிறாரோ அவருக்கு பூஜை செய்யப்படுகிறது. இராவணனுடைய சித்திரத்தை உருவாக்கி எரிக்கிறார்கள். அவன் எப்போதும் துக்கம் கொடுக்கக் கூடியவர். துக்கம் கொடுக்கக் கூடியவருக்கு எப்படி மகிமை செய்ய முடியும்? சிவபாபா சுகத்தின் வள்ளல் ஆவார். தினமும் சென்று அவர் மீது பூக்களை அர்ச்சனை செய்கிறார்கள். அவருடைய தொழில் எதுவும் தெரிவதில்லை. இன்றைய காலத்தில் மூட நம்பிக்கை அதிகமாக இருக்கிறது.

பாபா சொல்கிறார் - யாரிடமிருந்து உங்களுக்கு சொர்க்கத்தின் சுகம் கிடைக்கிறதோ அப்படிப் பட்ட தந்தையை மறக்கக் கூடாது. பிறகு சொர்க்கத்தின் அளவற்ற சுகத்தை பெற முடியாது. மம்மா பாபா என்று மட்டும் சொன்னால் சொர்க்கத்திற்கு வருவீர்கள். ஆனால் அங்கு வேலைக்காரர்களாக ஆவீர்கள். பாடலின் அர்த்தத்தையும் குழந்தைகள் புரிந்து கொண்டார்கள்.

ஈஸ்வரனுடையவர்களாக ஆகிய பின்பு இந்தக் குழந்தை பருவத்தை மறக்கவே கூடாது. அசுர குழந்தையிலிருந்து மாறி ஈஸ்வரனின் குழந்தையாக ஆகியுள்ளீர் கள். பிறகு தேவதையின் குழந்தையாக ஆவீர்கள். இது ஈஸ்வரிய பிறவியாகும். இந்த நேரத்தில் நீங்கள் சேவாதாரியாக இருக்கிறீர்கள். நீங்கள் ஆன்மீக சமூக சேவகர்கள். நல்லது!

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் காலை வணக்கமும். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. ஈஸ்வரிய பிறவி எடுத்த பிறகு எந்த ஒரு பாவ காரியமும் செய்ய கூடாது. நல்ல குழந்தையாக வேண்டும். அவகுணத்தை நீக்கி தெய்வீக குணங்களை தாரணை செய்ய வேண்டும்.

2. இறைவனின் உதவியாளர்களாக ஆகி ஆன்மீக சேவை மூலம் அனைவரையும் தனக்குச் சமமாக ஆக்க வேண்டும். மூன்றடி நிலத்தை வைத்து ஆன்மீக மருத்துவமனை அல்லது கல்லூரியைத் திறக்க வேண்டும். உடல், மனம், பொருளால் முழுமையான உதவியாளர் ஆக வேண்டும்.

வரதானம் : கர்மயோகி ஆகி ஒவ்வொரு காரியத்தையும் திறமையாகவும், வெற்றி நிறைந்ததாக செய்யக்கூடிய கவலையிலிருந்து விடுபட்டவர் ஆகுக.

பல குழந்தைகளுக்கு வருமானத்தை சம்பாதிப்பதற்கான, குடும்பத்தை பாலணை செய்வதற் கான கவலை இருக்கிறது, ஆனால் கவலையில் இருப்பவர்களால் ஒருபொழுதும் வருமானத்தை ஈட்ட முடியாது. கவலையை விட்டுயொழித்து கர்மயோகி ஆகி காரியங்களை செய்தீர்கள் என்றால், எங்கு நினைவு இருக்கிறதோ, அங்கு எந்தவிதமான செயலும் திறமை நிறைந்ததாகவும், வெற்றி நிறைந்தாகவும் முழுமையானதாக இருக்கும். ஒருவேளை கவலை யோடு வருமானத்தை ஈட்டியிருந்தால் கவலையை தான் உருவாக்குவீர்கள், மேலும் யோக யுக்த் ஆகி மகிழ்ச்சியோடு வருமானத்தை ஈட்டியிருந்தால் மகிழ்ச்சியை உருவாக்கும், ஏனெனில் எப்படிப்பட்ட விதையை விதைக்கிறோமோ, அப்படி தான் பலனை விளைவிக்கும்.

சுலோகன்: சதா குணம் என்ற முத்துக்களை கிரஹிக்கக்கூடிய அன்னபறவை ஆகுங்கள், கூழாங்கற்களை எடுக்கக்கூடியவர்களாக அல்ல.